Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸூ புரட்டாதி மீ 16 உ செவ்வாய்க்கிழமை (02 - 10 - 1990) ஹிஜ்ரீ 1411 ரபி. அப். 12 ஓசை 227

## தபால்கள் வந்தும் விநியோகம் இல்லை

(வவுனியா)

வவுனியா கச்சேரியின் கட்டிடப் பகுதியொன்றில் அமைந்துள்ள தபால் நிலையத்திற்கு கொழும்பிலிருந்து ஒரு தடவை தபால் பொதிகள் வந்து சேர்ந்திருப்பதாக அறியப்பட்ட போதிலும், அவற்றைத் தரம்பிரித்து விநியோகிக்கும் வேலைகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. போதிய ஊழியர் சமுகம் தராத காரணத்தினாலும், (4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா குருமன் காட்டில்

# புலிகள் - இராணுவம் 11மணிநேரகடும்மோதல்

[வவுனியா]

வவுனியா - குருமன்காடு இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் கடும் சண்டை மூண்டது. இச்சண்டை பதினொரு மணித்தியாலங்கள் வரை தொடர்ந்து இடம் பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரை அண்டியுள்ள குருமன்காடு இராணுவ முகாமில் இருந்து காலை ஆறு மணிக்கு மூன்று கவச வாகனங்கள் சகிதம் வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் மீது முகாமில் இருந்து நூறு யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

காலை ஆறுமணிக்கு ஆரம்பித்த இந்தச் சண்டை மாலை 5-00மணிவரை தொடர்ந்து நடைபெற்றது.

இந்தச் சண்டையைத் தொடர்ந்து இராணுவம் இழப்புக்களுடன் முகாம் திரும்பியது. ஆனால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விபரங்கள் தெரியவரவில்லை.

## புலிகள் உதவி வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் இராணுவத்தின் நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்தவர்களுக்கு உடனடி உதவியாக தமிழீழ விடுதலைப் புலிகளால் சடந்த மாதம் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா 2 கிலோ அரிசி, 1/2கிலோ சீனி, 100 கிராம் தேயிலை போன்ற பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் ஷெல்லுக்கு இருவர் காயம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் குடிமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட ஷெல் தாக்குதலில் சாந்தன் (வயது 23), இராசா (வயது 20) ஆகிய இருவரும் பலத்த காய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஓர் ஆணின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது

(விசேட நிருபர்)

நேற்றுக் காலை (1.10.90) மற்றொரு ஆணின் அழுகிய சடலமொன்று யாழ். கடற்கரை வீதி, திருச்சிலுவை சுகநல சேவை நிலையத்திற்கு முன்பாகக் கடலில் கரைஒதுங்கியது

மஞ்சள் நிற உள்ளங்கியும் நீட்டுக்கை பச்சை நிறத்தில் வெள்ளைக் கோடு உள்ள குளிர் ஆடையும் சடலத்தில் காணப்பட்டன.

செம்புச் சங்கிலியில் கோர்க்கப்பட்டிருந்த பதக்கத்தில் 786 என்னும் இலக்கம் காணப்பட்டது. இதனைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர்கள், வியாபாரிகள் நகர் செல்ல அச்சம்

(வவுனியா)

வவுனியாநகரம் செல்லும் தமிழ்மக்கள் திடீர்திடீர்என்று இராணுவத்தால் இடைநிறுத்தி வைக்கப்படுவதும் வழமையாகச்செல்லும் பாதை வழியாகச்செல்வது தடைசெய்யப்பட்டு, யாழ் வீதி வழியாகச் செல்வதற்குநிர்ப்பந்திக்கப்படுவதும் தொடர்கிறது.

கடந்த 27ஆம் திகதி கொழும்பு செல்வதற்காகச் சென்ற நூற்றுக்கணக்கான தமிழ் மக்களை வவுனியா நகரப்பகுதியில் இராணுவம் இடைநிறுத்தி வைத்தது.

இதன் காரணமாக அரச ஊழியர்கள் உட்பட ஏராளமான வியாபாரிகள் நகரப் பகுதி செல்வதற்கு அஞ்சுகின்றனர். (தி)

## மருந்துப் பொருள்களை தொடர்புகொண்டு பெறவும்

(மானிப்பாய்)

நெடுந்தீவு வைத்தியசாலைச்குரிய மருந்துப் பொருள் தொகுதியும் வைத்தியசாலை ஊழியர்களுக்கான ஊதிய பதிவுக்கோவையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மானிப்பாய் அலுவலகத்தில் உள்ளது. எனவே நெடுந்தீவுப் பகுதி சுகாதார சேவை ஊழியர்கள் அல்லது இப்பகுதி செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், தொண்டர்கள் யாராவது மேற்படி அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்புகொண்டால் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (க)

## பஞ்சாப் மாநிலத்தில்

## ஜனாதிபதி ஆட்சி நீடிப்பு மசோதா தோல்வி

(டில்லி)

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை மேலும் சில காலம் நீடிக்க வகைசெய்யும் அரசியல்சாசன சட்டத்திருத்த மசோதா நேற்று பாராளுமன்றத்தின் குறுகிய காலத்தொடரின் போதான முதலாம் கட்ட வாக்கெடுப்பில் தோல்வியுற்றது. இச் சட்டத்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் தேவைப்படும்.

நேற்றைய வாக்கெடுப்பில் காங்கிரஸ் கட்சி கலந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் மேலும் ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டையில் மீட்பு வேலைகளில் ஈடுபட்டுவரும் விடுதலைப்புலிகளால் நேற்று முன்தினம் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. எஸ் ஏ. ஆர்.துப்பாக்கி-1, எஸ்,எம் ஜி துப்பாக்கிகள்-2, கண்பவுடர் -10 கிலோ, மிதிவெடிகள்-

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில்

## பல மணி நேர மோதலில் ஒரு போராளி வீரமரணம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் பலமணி நேரம் கடும் மோதல் நடைபெற்றுள்ளது.

இப்பகுதியில் உள்ள இராணுவ காவல் அரண்கள்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் இராணுவ தரப்பில் பலத்த சேதங்களை ஏற்படுத்தியதாக தெரிகிறது. உயிரிழந்த இராணுவத்தின

(4ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் போராளி மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்தரைக்கட்டை என்னுமிடத்தில் நேற்று ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் பாவட் (சுப்பிரமணியம் செல்வராஜ்) என்ற போராளி மரணமடைந்துள்ளார், கன்னங்குடாவைச் சேர்ந்த இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். (க)

## இளைஞர் காலை இழந்தார்

(மண்கும்பான்)

மண்கும்பானில் இராணுவம் வெளியேறிய பகுதியில் தங்கள் வீடுகளைப் பார்வையிட சென்றவர்களில் ஒருவர் இராணுவத்தினர் வைத்துச் சென்ற மிதிவெடியில் அகப்பட்டுக்காலை இழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இப்பகுதிக்குச்சென்ற புவனேஸ்வரன் (வயது 19) என்ற இளைஞரே காலை இழந்தவராவர். இவர் மானிப்பாய் போதனா வைத்திய சாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க)

## கப்பலில் பணம் வந்தது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறைக்கு நேற்று மாலைவந்து சேர்ந்த கப்பலில் சில திணைக்களங்களுக்கு மட்டும் பணம் வந்துசேர்ந்துள்ளது. இத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நகருக்குள் மக்கள் வழமையான காரியங்களைஆரம்பிக்கவேண்டாம்

(யாழ்ப்பாணம்)

எச் காரணம் கொண்டும் யாழ், நகரத்திற்குள் மக்களோ, வர்த்தகர்களோ தமது வழமையான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டாம் என யாழ். அரசாங்க அதிபர் வேண்டியுள்ளார்.

இந்த வேண்டுகோளில் யாழ். நகரின் மையமான வர்த்தகநிலையங்கள்பேருந்து நிலையம் ஆகியன அமைந்துள்ள பகுதிகளில் மக்கள் நடமாடக்கூடிய சாதகமான நிலைமை இன்னமும் ஏற்படாதபடியால் அப்பகுதியில் பொதுமக்களும், வர்த்தகர்களும் தங்கள் வழமையான நடவடிக்கைகள் எதையும் எக்காரணம் கொண்டும் ஆரம்பிக்க வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (லோ)

## வவுனியாவில் 'புளொட்' தமிழரிடம் வரி அறவீடு

(வவுனியா)

புளொட் இயக்கத்தினரால் வவுனியா நகரப்பகுதியில் வைத்து தமிழ் வியாபாரிகளிடம் வரி அறவிடப்பட்டு வருகிறது.

சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பில்முகாம்அமைத்து வவுனியா நகரப்பகுதியில் உலாவிவரும் புளொட் இயக்கத்தினர் வியாபாரிகள் கொள்வனவு செய்து கொண்டு செல்லும் பொருட்களுக்கே வரி அறவிடுகின்றனர்.

இதேசமயம் சிங்கள வியாபாரிகளிடம் இவ்வாறு அறவிடக்கூடாது என்று இராணு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிமாவட்டத்தின்

# இன்றைய நிலை (பகுதி 5)

## சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கையில் தீவைக்கப்பட்ட வீடுகள்

| இல. | முழுப்பெயர் | முகவரி |
|---|---|---|
| 1. | க. இரத்தினாபதி | 4/1 குமரபுரம் |
| 2. | வ. கனகம்மா | 72, குமரபுரம் |
| 3. | ந. இராசு | 1ஏக்கர் ,, |
| 4. | ந. பகவதி | 1 ,, ,, |
| 5. | ச. நாகராசா | 1 ,, ,, |
| 6. | த. சிதம்பரம் | மருதநகர், பரந்தன் |
| 7. | மு. தருமரட்ணம் | D4 மருதநகர் |
| 8. | மு. நாகரட்ணம் | ,, ,, |
| 9. | மகாலிங்கம் | ,, ,, |
| 10. | மு. விஜயரட்ணம் | ,, ,, |
| 11. | ஆ. காண்டீபன் | ,, ,, |
| 12. | த. தவமணி | ,, ,, |
| 13. | சி. அந்தோனிராசா | ,, ,, |
| 14. | க. கருணாரட்ணம் | ,, ,, |
| 15. | சி. துரைராஜா | ,, ,, |
| 16. | வ. சுப்பிரமணியம் | ,, ,, |
| 17. | காட்டுவான் ஆண்டி | D4 கிளிநொச்சி |
| 18. | அ. கோபாலசந்திர நாயகன் | ,, ,, |
| 19. | ராஜசிங்கம் | ,, ,, |
| 20. | பாவாடை | ,, ,, |
| 21. | கோ. செல்பவதி | சூல்கமம் / கிளிநொச்சி |
| 22. | பிரான்சிஸ் சேவியர் | D4 மருதநகர், கிளிநொச்சி |
| 23. | சண்முகநாதன் | ,, ,, ,, |
| 24. | கோவிந்தன் முத்து | ,, ,, ,, |
| 25. | வடிவேல் லக்சுமனன் | ,, ,, ,, |
| 26. | ஆறுமுகம் காளிமுத்து | ,, ,, ,, |
| 27. | பழனி வீரம்மா | ,, ,, |
| 28. | ஆனந்த நடராசா | மருதநகர் |
| 29. | வி. எம். பி. பரதன் | D4 கரடிப்போக்கு |
| 30. | சுந்தரலிங்கம் | D4 எமர்சன் வீதி |
| 31. | தங்கராசா | D4 கிளிநொச்சி |
| 32. | க. பஞ்சலட்சுமி | D4 வின்சன் வீதி |
| 33. | செல்வராசா | மருதநகர் |
| 34. | செ .மாயமகு | D5 கரடிப்போக்கு |
| 35. | சி. ஞானவேல் | ,, ,, |
| 36. | சி. இலட்சுமணன் | ,, ,, |
| 37. | இ. நாகலிங்கம் | 1ஏக்கர்குமரபுரம் |
| 38. | மு. நாகரத்தினம் | 62 கணேசபுரம் |
| 39. | சி. மார்க்கண்டு | 66.கணேசபுரம் |
| 40. | ப. மகாதேவன் | ,, ,, |
| 41. | வினாயகமூர்த்தி | 65 கணேசபுரம் |
| 42. | அமிர்தலிங்கம் | ,, ,, |
| 43. | ந. ஜெயபாலராஜன் | கணேசபுரம் |
| 44. | நாகம்மா | ,, |
| 45. | சண்முகராசா | 68 கணேசபுரம் |
| 46. | மரியதாசன் | 67 ,, |
| 47. | சி. மகேஸ்வரி | 63 ,, |
| 48. | இ. குலசேகரம் | 63 ,, |
| 49. | ந. ஜெனகாந்தராஜா | கணேசபுரம் |
| 50. | ச. விஜயகுமார் | 63/1 ,, |
| 51. | த. கார்த்திகாயினி | 56/2 ,, |
| 52. | க. ஆறுமுகம் | 60/1 ,, |
| 53. | பொ. செல்வராஜா | 60/2 ,, |
| 54. | ப. குணரத்தினம் | 60 ,, |
| 55. | பொ. மகாலிங்கம் | 69 ,, |
| 56. | வ. நவரத்தினம் | 62 ,, |
| 57. | க. கமலேஸ்வரி | 70 ,, |
| 58. | தி. அலெக்ஸ்சாண்டர் | செட்டிகுளம் |

(தொடரும்)


தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்
(வரைவுள்ளது)

### லண்டன் பிற்மன் பரீட்சார்த்திகளின் கவனத்திற்கு

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் 4-10-90 அன்று தெல்லிப்பழை சந்தியிலுள்ள காரியாலயத்தில் காலை 9 மணிக்கு சந்திக்கவும்.

பொது முகாமையாளர்-

(B/ 1450)


## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சுன்னாகம் 6 ஆம் கட்டையைச் சேர்ந்த நடராசா சண்முகவேல் என்பவருடைய அடையாள அட்டை இல. 480580605V நல்லூர் கோயில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (R/ 687)


### டில்கா வாச் வேக்ஸ் (Dilka Watch Works)

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (இராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்றொனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B-1444)


### இணக்கமன்று தெரிவுக் கூட்டம்

(கோண்டாவில்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் உள்ளூர் பிணக்குகளைத் தீர்க்கும் பொருட்டு கிராமங்கள் தோறும் இணக்க மன்றுகளை அமைக்கின்றனர். கோண்டாவிலுக்கான இணக்கமன்றை தெரியும் பொதுக்கூட்டம் எதிர்வரும் 6. 10. 90 அன்று பி. பகல் 3. 30 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு சமுகம் தருபவர்கள் 1987 ஆம் ஆண்டுக்குப் பின் இந்திய இராணுவம் இருந்தபோது மாற்று இயக்கங்களுடன் எந்த வகையிலும் (ஈ. பி. ஆர். எல். எப். ரெலோ ஈ.என்.டி.எல். எப், புளோட்) தொடர்பற்றவர்களாக இருக்கவேண்டும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றங்களில் சம்பந்தப்படாதவராகவும், கோண்டாவல் சிற்றூரவைப் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

### கைப்பையைப் பெறலாம்

(பூநகரி)

சங்குப்பிட்டி – கேரதீவுத் துறையில் தவறவிடப்பட்ட கைப்பை ஒன்று இப்பொழுது பூநகரி பிரதேச மக்கள் முன்னணி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம். அடையாள அட்டை ஒன்றும் காணப்பட்டது.

(71)


### தேவை

மூன்று பேஸ் ஜெனறேற்றர் 15 K.V.A.

பனை அபிவிருத்திச் சபைக்கு மூன்று பேஸ் (3 Phase) ஜெனறேற்றர் 15 K. V. A. க்கு மேற்பட்டது தேவைப்படுகின்றது. குறித்த ஜெனறேற்ரரை வைத்திருப்பவர்கள் அதன் விலை விபரங்களுடன் சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியில் அமைந்திருக்கும் பனை அபிவிருத்திச் சபையின் காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்

(B/1451)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





வல்லிபுரம்

கணேசமூர்த்தி விவேகானந்தன்

இடைக்காட்டில்
மலர்வு: 30 - 07 - 1956 22 - 03 - 1961

பிரமந்தனில்
உதிர்வு: 02 - 10 - 1985

- குடும்பத்தினர்

இடைக்காடு. (R - 688)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி


| தாயின் மடியில் | | தாயக விடிவில் |
|---|---|---|
| 17 | | 02 |
| - | | - |
| 11 | | 09 |
| - | | - |
| 1975 | | 1990 |



### தயானந்தன் (சின்ன அக்காச்சி)

இளம்புலி!
செந்தமிழன்
என்ன வந்தாலும்
அடிபணியோம் நாங்கள்
என்பதற்கு
மின்னும் அத்தாட்சி
வெளிச்சம் அளித்த விடிவிளக்கு
பொன்நிற வேங்கை
விடுதலைத் தொண்டுப்
புகழ் முடியே

(B. 1447)

## மில்க்வைற் சலவைப் பவுடர்

வெற்றுப் பைக்கற் 25 அனுப்பிப் "படிப்பினை" வெளியிடும் மகாத்மா காந்தி ஸ்ரிக்கரும் அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(B. 1442)

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

## சிந்தனைக்கு

அடிமைத் தனத்தை அறுக்கும் ஆற்றல், அடிமை ஒவ்வொருவன் சொந்தக் கையிலேயே உள்ளது.

வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 02-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# பலவீனமானவை வெல்வதில்லை

ஒரு இனத்தின் பலமே அதன் உரிமையைத் தீர்மானிக்கின்றது. பலவீனமான உயிரினங்கள் தமது வாழ்க்கைப் போராட்டத்தில் வென்றதில்லை. பலவீனமான இனங்கள் எப்பொழுதும் தமது உரிமையைப் பெற்றதுமில்லை.

அதாவது பலவீனமான போராட்டங்கள் வெற்றி பெற்றதாகவும் இல்லை. அந்நியனோ அடக்குமுறையாளனோ ஒரு நாட்டின் அல்லது இனத்தின் பலத்தைக் கண்டு அஞ்சினானே ஒழிய ஒருவனின் நியாயபூர்வமான உரிமைகளை என்றும் மதித்ததில்லை. அடக்கிஒடுக்கப் பட்டவர்கள் தமது பலத்தைக் காட்டிய போதுதான் சுதந்திரநாடுகள் தோன்றின.

இதேபோன்று இலங்கையிலுள்ள தமிழர்கள் இங்கு சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் வாழ வேண்டும் எனில் அதற்கு ஒரே வழி எமது பலத்தைக் கொண்டு சிறிலங்கா இராணுவத்தை வெற்றி கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. தமிழரின் உரிமைகள் பலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டுமே ஒழிய தமிழரின் பலவீனமான நிலையில் தீர்மானிக்கக்கூடியது அல்ல.

கடந்த காலத்தில் தமிழர்கள் பலவீனமான நிலையில் பலவீனமான தலைமைத்துவத்தைக்கொண்டிருந்தார்கள். இதனால் தமிழ்த் தலைவர்களும், மக்களும் தொடர்ந்து பௌத்த சிங்கள அரசாங்கங்களினால் 40வருடங்களுக்கு மேலாக ஏமாற்றப்பட்டுக்கொண்டே வந்தார்கள். தமிழரின் பலவீனம் ஏமாற்றத்தின் வடிவமாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை அவ்வாறு இல்லை. இன்று தமிழர்கள் பௌத்த சிங்கள அரசிற்குத் தமது பலத்தைக் காட்டத் தொடங்கியுள்ளார்கள். ஆனால் சிறிலங்கா அரசு இன்றும் பழைய முறையைக் கைவிடவில்லை.

''இராணுவ ரீதியாகப் புலிகளைத் தோற்கடித்து, அரசாங்கத்தை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள முடியாது என்ற ஒரு நிலையைத் தோற்றுவித்து புலிகளை பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்'' என உயர் கல்வி அமைச்சர் லலித்தும், பாராளுமன்றப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்காவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதாவது புலிகளைத் தோற்கடித்து தாம் விரும்பிய தீர்வை தமிழர் மீது திணிப்பது, அல்லது தமிழர் மிகவும் மோசமாகப் பலவீனப் பட்டிருந்தால் உரிமையைப்பற்றிப் பேசுவதையே நிறுத்திக் கொள்வது என்பதாகும்.

இதற்காக போராட்டத்தை வழி நடத்துபவர்களை அழித்துவிடுவது அல்லது போராட்டத்தின் மையக்கருவை அழித்துவிடுவதற்கு சிறிலங்கா அரசு எண்ணுகிறது.

ஆனால் இன்று முன் எப்போதும் இல்லாததுபோன்று சிறிலங்கா இராணுவம் நேரடியாக தோல்விகளைச் சந்திக்கத்தொடங்கியுள்ளது. கடந்த மூன்று மாதத்திற்குள் பெரியளவினதான இழப்புக்களை முன் எப்போதும் இல்லாத அளவில் கண்டுள்ளது. மேலும் இராணுவம் தன்து விருப்பத்திற்கு ஏற்ற முறையில் தொழிற்பட முடியாது முடங்கிப் போயுள்ளது. வடக்கில் தனது நடமாட்டத்தை முற்றாகவே இழந்துள்ளது. கிழக்கில் சுதந்திரமான நடமாட்டத்தை இழந்துள்ளது.

அதாவது எமது மண்ணில் அவர்கள் தமது சுதந்திர நடமாட்டத்தையும், தமது அதிகாரத்தின் பிடியையும் இழந்து வருகிறார்கள். அது எமது பலத்தினாலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளதுஇதுஎமது விடுதலையின் முதற்படி.

சுருங்கக் கூறுவதானால் எமது சுதந்திரம் எமது பலத்திலேயே தீர்மானிக்கப்படும் என்பதே உண்மை.

# ஈராக்கின் வெளியுறவுஅமைச்சர் ஜோர்தானுக்கு திடீர் விஜயம்

(அம்மான்)

ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் அவர்கள் எதிர் பாராத வகையில் திடீரென ஜோர்தானுக்கு விஜயம் செய்து மன்னர் ஹுசையின் அவர்களைச் சந்தித்துள்ளார் இவ் வருகைக்கு காரணம்யாது என்பது இதுவரை வெளியிடப்படவில்லை. வளைகுடா நெருக்கடிக்கு முன் ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதிக்கும், உணவுப்பொருட்கள்இறக்குமதிக்கும், ஜோர் தான் தரை மார்க்கத்தில் பெரும் பாதையாகச்செயற்பட்டது. ஐ. நா. வின் தீர்மானப்படி தடை முயற்சியில் தானும் பொதுப் படையாக பங்குபெறப் போவதாக ஜோர்தான் அண்மையில் கூறியிருந்தது.

# முற்றுகையின் முடிவில்...

> — யாழ்.மண்ணின் அவலங்களின் மூலாதாரமாகத் திகழ்ந்த 'கோட்டை' இன்று அலங்கோலமான நிலையில் அனாதரவாகக் கிடக்கின்றது.
>
> — நம்மின வரலாற்றின் பல கறைபடிந்த அத்தியாயங்களைத் தனதாக்கிக் கொண்ட கோட்டையின் இறுதி அத்தியாயங்களைக் கடந்த வாரம் 'விடுதலைப் புலிகள்' முடித்து வைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு புதிய பரிமாணத்தை தந்துள்ளார்கள்.
>
> — 'கோட்டை'யை கோட்டைவிட்டு கொடியவர் அகன்ற பின்னர் கோட்டைப் பகுதி எப்படி உள்ளது?... வாருங்கள் பார்க்கலாம்.

(நேற்றைய தொடர்ச்சி)

பொலிஸ் நிலையம் இருந்த கட்டிடப்பகுதியைக் கடந்து செல்கையில் எத்தனை பாரிய குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றிருந்தன என்பதைக் கண்டு நெஞ்சு பதைத்தது.

திடீரெனத் துர்நாற்றம் நாசியை துளைத்தெடுத்தது. அங்குமிங்குமாய் திரும்பிய போது உருக்குலைந்த நிலையில் சடலங்கள். சிறீலங்கா இராணுவச் சீருடைகளுடன் தலைக்கவசமும் - பூட்ஸ்-மாட்டிய கால்களும் சடலங்கள் இராணுவத்தினருடையவையே என்பதை ஊர்ஜிதம் செய்தன. மெதுவாகக் கடந்து செல்கையில் பாரிய விறகுக் குற்றிகளாலும் வாகனங்களின் சிதைந்த இரும்புப் பாகங்களாலும், துப்பாக்கி குண்டுகள் அடைத்து வரும் வெற்றுப் பெட்டிகளாலும் இன்ன பிறவற்றாலும் அமைக்கப்பட்ட தடுப்பு அரண்கள் இலகுவாக எவரும் உள்ளே சென்று விடுவதை இவை தடுத்து நிற்கின்றன. ஒவ்வொரு தடையாக விலக்கி பிரதான வாயிலின் உட்புறம் சென்றேன். உட்பகுதியில் வெளியிலிருந்து ஏவப்பட்ட புலிகளின் ஏவுகணைகளின் சிதறு பாகங்கள் ஒரு புறம் கிடக்க- முதலாவது காவலரணின் ஒரு பகுதி சேதமாகிக் கிடந்தது. அதனை அடுத்து பெரிய அகழி - இவ்அகழியைக் கடக்கும் பாலம் எந்த சேதமும்

— பாலா —

இன்றிக் காணப்படுகிறது. ஆனால் பிரதான வாசலின் ஊடாக வரும் இரண்டாம் வாசலின் வலதுபக்க உட்புறத்தில்பாரிய சேதம் ஏற்பட்டிருந்தது. இதுவும் கூட வெளியே இருந்து நடத்தப்பட்ட தாக்குதலின் போதே ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை இலகுவில் எவரும் அனுமானித்து விடலாம். ஏனெனில் பசீலன் 2000 எனப்படும் குண்டின் சிதறிய பாகங்கள் உட்புறத்தில் காணப்பட்டன என்பதுடன் இக்குண்டு வெடிப்பின் பாதிப்பினால் உட்புறத்திலிருந்த பொருட்கள் மின்விசிறிகள், கட்டில்கள், மேசைகள், கதிரைகள் என்பன பலத்த பாதிப்புற்றுக் கிடக்கின்றன.

இந்த வாசலையும் கடந்து உள்ளே சென்றால் வாகனங்கள் சிதறிக்கிடக்கும் காட்சி தான் முதலில் தெரியவரும். கூரையிழந்த கட்டிடங்கள் கற்குவியலாய் காட்சி தரும் முன்னாளைய அலுவலகங்கள் சரிந்து போய்க்கிடக்கும் தொலைத்தொடர்பு கோபுரம் சிதைவுற்றுக் கிடக்கும் தேவாலயம் என்பன ஒவ்வொன்றாய் கண்களில் விரிந்தது; பழைய நினைவுகளில் மனம் மூழ்கியது. தன்மானத்தோடும், சுதந்திர உணர்வோடும் செயற்பட முனைந்த இளைஞர்களை மாட்டி வதைக்கும் கொலைக் கூடமாகத் திகழ்ந்த கோட்டை! பத்துக்கும் மேற்பட்ட உயிர்களைத் துடிக்கப் பதைக்கப்பலிவாங்கிய தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் சூத்திரதாரிகளின் புகலிடமாகக் கிடந்த - கோட்டை!

தீவுப்பகுதிக்கான ஒரே ஒரு தரைமார்க்கப் போக்குவரத்து பாதையை பொது மக்கள் பாவனைக்கு விட மறுத்து மண்டைதீவிலிருந்தும், கோட்டையிலிருந்தும் இராணுவம் கொடூரத் தாண்டவம் புரியக் காரணமாக இருந்த கோட்டை!

இன்று பட்டொளிவீசிப்புலிக் கொடிபறக்கும் புனிதப்பிரதேசம். இந்தக்கோட்டையை மீட்டெடுப்பதிலேதான் எத்தனை உழைப்பு எத்தனை உயிர்கள்- எவ்வளவு குருதி- எவ்வளவு வியர்வை செலுத்தப்பட்டிருக்கும் என்பதை எண்ணி வியந்து கொண்டிருந்தேன்.

'புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி இராணுவம் கோட்டையை கைவிடவில்லையாம். மனிதாபிமான நோக்கில் யாழ்ப்பாண வைத்திய சாலையை திறக்கவும், நகரப் பகுதியை இராணுவ சூனியப் பிரதேசமாக்கவுமே இராணுவம் முகாமை மூடிக்கொண்டதாம்'. ரஞ்சன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. கோட்டையைச் சுற்றி நோட்டமிடலானேன்.

ஒவ்வொரு காவலரணுக்குச் சமீபமாகவும், அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிகளுக்குள்ளும் நுளம்பு வலையுடன் கூடிய படுக்கைகள், சமையல் பாத்திரங்கள், ஏராளமான வெற்றுத் தோட்டாக்கள், பெருவாரியான கலங்கள் (ஷெல் கவர்கள்) என்பன காணப்பட்டன. ஒரு அரணுள் தலைக்கவசத்தினுள் சமையல் செய்யப்பட்டிருந்தது. இதிலிருந்து காவல் கடமையில் ஈடுபட்டிருந்த ஒவ்வொரு அணியினருக்குமிடையிலான தொடர்புகூட மிகக் குறைந்த அளவிலேயே இருந்திருக்கிறது என்பதை அனுமானிக்கமுடிந்தது. ஒவ்வொரு காவலரணுக்கும்இடையிலான நடைபாதையானது வெறுமனே சாக்குகளைத் தொங்க விட்டுத்தான் மறைக்கப்பட்டிருப்பது இந்த அனுமானத்தை மேலும் ஊர்ஜிதம் செய்வதாக அமைந்தது. மேலும் சில பதுங்குகுழிகளில் படுக்கைகளுக்குச் சமீபமாக மின்விசிறி போன்ற நோயாளருக்கான பாவனைப் பொருட்கள் கிடக்கக் காணப் பட்டன.

காவலரண்களுக்குச் சமீபமாக வேட்டைத் துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தும் தோட்டாக்களின் வெற்றுக் கவர்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. ஏராளமான வேட்டைத் துப்பாக்கிகள், டபிள்பரல் துப்பாக்கிகள் உட்பட ஏராளமான ஆயுதங்கள் நாசமாக்கப்பட்டுக் கிடக்கின்றன.

பண்ணைச்சந்திக்கு சமீபமாக இருந்த காவலரணுக்குச் சமீபமாகவே பல இராணுவத்தினர் இருந்திருக்கக் கூடும் என அனுமானிக்கமுடிகிறது. மேலும் இக்காவலரணுக்கு அருகில் பலமான –நீளமான - கயிறுகள் காணப்படுகின்றன. கயிற்றின் மூலம் தரையிறங்க முயற்சிக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கான தடயமாக இது காணப்படுகிறது. புலிகளின் முற்றுகையை முறியடிக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டும் இயலாத நிலையிலேயே கடற்கரைப் பக்கமாக இருந்த கோட்டை மதிலின் ஒரு பகுதியைத் தகர்த்து அதனூடாக இராணுவத்தினர் வெளியேறி இருக்கின்றனர் என ஊகிக்க முடிகின்றது.

பிரதான அலுவலகத்தின் பின்பகுதியில் விழுந்து வெடித்த குண்டொன்றினால் அக்கட்டிடம் முழுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. சமையல்பகுதி உட்படப் பெரும்பாலான கட்டிடங்கள் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டுக் கிடக்கின்றன. தொலைத்தொடர்புக் கோபுரம் மண்ணோடு விழுந்து போயுள்ளது. பலவகையான தட்டச்சுப் பொறிகளும், மின் ஆக்கியும் (ஜெனரேட்டரும்), மின் விசிறிகளும். அலுமாரிகளும், மேசை, மற்றும் இருக்கைகளும் கோபாவேசத்தில் நாசமாக்கப்பட்டுள்ளமை நன்கு புலனாகின்றது.

கோட்டையின் உட்புறத்தில் எங்கு நின்று திரும்பிப் பார்த்தாலும் தெரியக்கூடிய உயரத்தில் புலிக்கொடியும், அதன் கீழே தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய செந்நிறக் கொடியும் பட்டொளி வீசியபடி அசைந்து கொண்டிருக்க - விடுதலைப் புலிகளின் போர்க்கால ராகங்கள் காற்றில் கலந்து செவிகளுக்கு விருந்தளிக்க - 'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே' எனும் எண்ணம் பிறக்க - கோட்டை வாசலிலிருந்து வெளியேறினேன்.

(முற்றும்)

# ஈராக் - சீன இரகசிய ஆயுத விற்பனை

## லண்டன் நாளேடு குற்றச்சாட்டு

(பக்தாத்)

அணு ஆயுதங்களையும் ஏவுகணை எரிபொருட்களையும் நரம்பியல் பாதிப்பையும் கட்டுப்படுத்தக் கூடியதுமான ஒரு புதியவகை கதிரியக்க இரசாயனப் பொருளை சீனா ஈராக்கிற்கு இரகசியமாக விற்பனை செய்துள்ளதாக லண்டன் நாளேடு ஒன்று கூறுகிறது.

இந்த இரசாயனப் பொருளை வாங்கியதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையினால் அண்மையில் கொண்டுவரப் பட்ட பொருளாதாரத்தடை நடவடிக்கைக்கு எதிராக ஈராக்குடனான இரகசியமான வர்த்தகத்தில் சீனா ஈடுபட்டதைத் தொடர்ந்து ஐ. நா சபையின் தீர்மானத்தை மீறிய முதல் நிரந்தர உறுப்பு நாடாக சீனா அமைந்துள்ளதாகவும் அந்த நாளேடு கூறி உள்ளது.

ஆனால் இச் செய்தியினை மறுத்து சீனாவின் வெளியுறவு அமைச்சகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

சீனா கடமைப் பொறுப்புள்ள ஒரு நாடு என்றும் ஐ. நா. வின் 661 தீர்மானத்தின் அமுலாக்கத்தில் மிகத் தீவிரமாக இருக்கிறது என்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# திணைக்களங்களின் பற்றாக் குறை பற்றி கொழும்புக்கு அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசின் பொருளாதாரத் தடை நடவடிக்கை காரணமாக திணைக்களங்களில் ஏற்பட்டுள்ள பொருட்கள் சேவைகளின் பற்றாக்குறைபற்றியும் அவற்றின் அத்தியாவசிய தேவைகள் குறித்தும் அண்மையில் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் யாழ். அரச அதிபரிடம் கையளித்த அறிக்கைகளின் விபரங்களை நேற்று யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை பருத்தித்துறை வந்திருந்த கப்பல்மூலம் அரச அதிபர் இதனை கொழும்புக்கு தெரிவித்துள்ளார்.

எஸ். எல். ஏ. எஸ்.

இதனுடன் இலங்கை நிர்வாகசேவை பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி முடிவடைந்து விட்டதையிட்டு இந்தத் திகதியை மேலும்நீடிக்கும்படியும் தாம் கேட்டுக் கொண்டுள்ளதாக யாழ். அரச அதிபரே தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை நிர்வாக சேவைக்கான விண்ணப்பங்களை தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தற்பொழுதும் விண்ணப்பித்தவண்ணமே உள்ளனர். இதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் கிடைக்கப் பெறாததால் யாழ். செயலகத்தில் உள்ள மேலதிக அரசாங்க அதிபரின் பணிமனையில் வைத்து விண்ணப்பப் படிவத்தின் வடிவத்தை விண்ணப்பதாரிகள் குறித்துக் கொள்வதையும் காணக்கூடியதாக உள்ளது. (லோ)

## வீடு சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த இருபத்தியேழாம் திகதி இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் கோயில் வீதியைச்சேர்ந்த என். மகாலிங்கம் என்பவரது வீடும் பலத்த சேதமுற்றது.

யாழ். செஞ்சிலுவைச் சங்க நிர்வாக உறுப்பினரில் ஒருவரான என். மகாலிங்கம்குண்டு வீசப்பட்ட நேரத்தில் வீட்டிற்குள் இருந்தும் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

## ஆளுநருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக திருமலையில் இருந்து இடம் பெயர்ந்த கூட்டுறவு திணைக்கள உத்தியோகஸ்தர்கள் தாம் கடமைக்கு திரும்ப முடியாமைக்கான காரணங்களை விளக்கி மாகாண ஆளுநருக்குகடிதம் அனுப்பியுள்ளனர்.

இவர்களுக்கு வேலை நீக்க அறிவிப்பு கடிதங்கள்வந்ததை தொடர்ந்தே இந்த முயற்சி எடுக்கப்பட்டது. மேலும் இவர்கள் தமக்கு நிவாரணப் பொருட்கள் பெற்றுத்தரும் படி, யாழ். அரச அதிபரிடமும் முறையிட்டுள்ளனர். (க)

## கடமைக்குவரவும்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் தபால் நிலையத்தில் கடமைபுரியும் ஊழியர்களை எதிர்வரும் 4ஆம் திகதிகாலை 9.00 மணிக்கு பின்வரும் இடங்களுக்கு வருமாறு முல்லைத்தீவு மாவட்ட பதில் தபால்அத்தியட்சகர் சி. தர்மராஜன் வேண்டுகிறார்.

முல்லைத்தீவு தபால்நிலைய ஊழியர்கள் புதுக்குடியிருப்புக்கும் ஒட்டுசுட்டான் தபால் நிலைய ஊழியர்கள் அதே இடத்திற்கும் வரும்படி கேட்டுக் கொள்கிறார்.

## போக்குவரத்துசபை ஊழியர்கள் கடமைக்குத் திரும்ப பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை தலைமையலுவலகத்தில் நேற்று (01-10-90)உயர் அதிகாரிகளின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டவாறு சகல சாலைகளையும், அலுவலகங்களையும் சார்ந்த பாதுகாப்பு காவலர்களும் ஏனைய உத்தியோகத்தர்களும் (கூலி நிர்ணயச்சம்பளச்சபை சாராத ஊழியர்கள்) வரும் எட்டாந் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அந்தந்த இடங்களுக்கு கடமைக்குத் திரும்புமாறுகேட்கப்படுகின்றார்கள்.

இவைபற்றி மேலதிகவிபரங்களைப் பெறவிரும்பும் ஊழியர்கள் தங்களுக்குரிய சாலை முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்ளும் படியும் பொது முகாமையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், 8 ஆம் திகதியிலிருந்து கடமைக்கு சமுகமளிக்காத மேற் குறிப்பிட்ட ஊழியர்கள் அத்தினத்திலிருந்து சம்பளமற்ற விடுமுறையில் வைக்கப்படுவார்கள் என்றும் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## யாழ். பிரதம தபாலகம் பழைய இடத்திற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்ட பிரதம தபால் கந்தோர் மீண்டும் பழைய ''மாக்பெட்'' கட்டிடத்திற்கு மாற்றப்படுகின்றது.

சிறிலங்கா இராணுவத்தின் உக்கிர ஷெல் ஏவுதல்கள், கடற் படையின் பீரங்கி வெடிகள், விமானங்களின் குண்டு வீச்சுகளுக்கு அஞ்சி யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டிருந்த யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையம் மீண்டும் யாழ். பிரதான வீதியில் உள்ள மாக்பெட் கட்டிடத்திற்கு இன்று மாற்றப்படுகின்றது.

இதேவேளை நேற்று மாலை மூன்று மணி நாற்பத்தைந்து நிமிடமளவில் பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடைந்துள்ள கப்பலில் 118 தபால் பொதிகள் வந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மேலும்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சடலம் ஒரு முஸ்லிமுடையதாக இருக்கலாமெனவும் கருதப்பட்டது.

இதேவகையான முறையில் மற்றொரு சடலம் கடலில் ஆற்றுப் பகுதியில் வலை ஒன்றில் சிக்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவை சிறிலங்கா கடற்படையினரது சடலங்களாக இருக்கலாமென்ற ஊகம் கூறப்பட்டதாயினும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

கரை ஒதுங்கிய சடலம் நேற்று விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. (21)

## ஜனாதிபதி

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளாததுடன் ஆளும் தேசிய முன்னணி சாதாரணப் பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறிவிட்டதால் நம்பிக்கையில்லாத் தன்மையை பெற்றுவிட்டதாகவும் கடுமையாகச் சாடியது. காங்கிரஸ் உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்துப் பேசிய பிரதமர் சிங் பஞ்சாப்பில் தேர்தலை நடத்த அரசு தயாராக இருப்பதாகவும், தேவைப்பட்டால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழியும்படியும் காங்கிரஸ் கட்சியினருக்கு சவால் விடுத்தார்.

## விசேடகூட்டம்

(கொழும்புத்துறை)

எதிர் வரும் நாலாம் திகதி வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர்அலுவலகத்தில் நடைபெறவுள்ள விசேட கூட்டத்திற்குச் சகல பிரதேச சபைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், நகரசபைகளின் செயலாளர்கள்ஆகியோர்களைத்தவறாது சமுகமளிக்கும்படி யாழ்.பிரதேசஉள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா கேட்டுக்கொள்ளுகின்றார். (24)

## வெடிக்காத ஷெல்கள் மீட்பு

(குருநகர்)

கல்முனைப்பகுதியிலிருந்து ஶ்ரீலங்கா இராணுவத்தால் ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகளும், ஆட்லறி ஷெல்களும் வெடிக்காத நிலையில் குருநகர்ப் பகுதியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டுள்ளது. (றெ)

## கடிதங்களைப் பெறவும்

கடிதத்தொகுதி ஒன்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க மானிப்பாய் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது. இவற்றின் முகவரிகள் கீழே தரப்படுகின்றன. உரியவர்கள் உடனடியாக மேற்படி அலுவலகத்தில் சென்று பெற்றுக் கொள்ளலாம். க. நிர்மலா தெல்லிப்பளை, கந்தசாமி ஒட்டுமடம், லட்சுமண சர்மா கொக்குவில், இராசரட்ணம் சண்டிலிப்பாய், ப. நாகராஜா மாதகல், இரஞ்சிதமலர் சுதுமலை, வசந்தா மானிப்பாய் கிருஸ்ணபிள்ளை பண்ணாகம், எஸ் சாம் சீவரட்ணம் நவாலி, ஆறுமுகம் நவாலி, துரைராஜ் நவாலி, நீலா சிவலிங்கம் நவாலி, கே. கந்தையா அளவெட்டி, எம். மகாலிங்கம் நவாலி, தர்மலிங்கம் நவாலி, எஸ். நாகேஸ்வரி மீசாலை, முத்தையா சுழிபுரம், ரி.செல்வலிங்கம் சுண்டிக்குழி

## பாடசாலை ஆரம்பிப்பதற்கு சூழ் நிலைகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

மீண்டும் யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான சூழல் நிலைமைகளை ஆராயும்படி வடமாகாண கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிப்பதற்கான சுற்றறிக்கையொன்றைத் தயார் செய்துள்ளனர்.

ஒவ்வொரு பாடசாலைகளின் அதிபர்களும் தமது பாடசாலைகளின் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்க அங்கத்தவர்கள் அந்தப் பாடசாலை அமைந்துள்ள பகுதி உதவி அரசாங்க அதிபர் ஆகியோருடன் கலந்தாலோசித்து அந்தந்தப் பகுதிகளில் நிலவும் சூழலுக்கேற்ப பாடசாலையை நடத்துவது பற்றியும் பாடசாலைகளின் நிலைமை பற்றியும் ஆராயும் படியும் அந்த அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

இலவச உணவுப் பங்கீடு பற்றி கலந்துரையாடுவதற்காக தென்மராட்சியில் உள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், உதவி அரசாங்க அதிபர், கிராம சேவையாளர்கள், வட்டவைத் தலைவர்கள், செயலாளர்கள் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்திற்கு சமுகம் கொடுக்கும் வண்ணம் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணியினர்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கோட்டை

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

64,ரவைகள்-1299,60எம்.எம் மோட்டார் ஷெல்கள்-12, தலைக்கவசம்-10 என்பன நேற்று முன்தினம்மீட்கப்பட்ட ஆயுதங்களாகும். மீட்புவேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. (க)

## கப்பலில் பணம்

திணைக்களங்கள் தாமாக கொழும்பிலுள்ள தமது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு கப்பலில் ஊழியர் சம்பளம்உட்படஅந்ததிணைக்களத்திற்கு ஏற்படும் பல்வேறு தேவைகளையும் பூர்த்திசெய்வதற்கு போதுமானபணத்தை வரவழைத்துள்ளது. (லோ)

## வவுனியாவில்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வத்தால் புளொட் இயக்கத்தினருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தி)

## பல மணி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரின் எண்ணிக்கை இதுவரை தெரியவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் சரத்பாபு (சுந்தரலிங்கம் சுந்தரகுமார்) என்ற போராளி வீரமரணமடைந்தார். துன்னாலை வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (க)

## புலிகள்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அரசாங்கம் வழங்கிவரும் நிவாரணத்தில் முதலாம் கட்டம் முழுமையாக வழங்கப்பட்ட போதிலும் இரண்டாம் கட்டம் ஐம்பது வீதமான பொருட்களே இதுவரை வழங்கப்பட்டுள்ளன (க)

## காங்கேசன்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்துள்ளனர். இச்சம்பவத்தில் வேறு இருவரும் சிறிய காயங்களுக்குள்ளானார்கள். இவர்கள் மானிப்பாய் போதனா வைத்திய சாலைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

## தபால்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்கி)

இடவசதி இல்லாத காரணத்தினாலும் நூற்றுக்கணக்கான தபால்கள் தபால் நிலையத்தில் தேங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதிக்குப்பின்னர் வவுனியாவில் தபால் விநியோகம் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சில ஊழியர்கள் மட்டுமே தபால் நிலையம் சென்று வருகைப் பதிவேட்டில்கையெழுத்திட்டு வருகின்றனர். (தி)

## மரண அறிவித்தல்கள்

### திரு. கந்தையா சிவலிங்கம்

குப்பிளானைச் சேர்ந்த திரு. கந்தையா - சிவலிங்கம் (முன்னாள் யாழ். கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்) அவர்கள் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், சோதிநாதன் (ஆசிரியர், இரத்தினபுரி த.ம வி), கணேசநாதன், மோகன் (சுவிஸ்), யோகநாதன், குலச்செல்வி, கலையரசி, தனவதி, தவநாதன், குணராசா ஆகியோரின் அன்புத் தகப்பனுமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 02 - 10 - 90 செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் குப்பிளான் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(R/691) சி. கணேசநாதன்

### திருமதி பிறிஜெட் அம்பிகா மரியாம்பிள்ளை

கரம்பொன் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பிறிஜெட் அம்பிகா மரியாம்பிள்ளை 29. 9 1990 இல் அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 30. 09. 1990 இல் சுருவிலில் நடைபெற்று நல்லடக்கம் கரம்பொன் சேமக்காலையில் இடம்பெற்றது என்பதை ஆழ்ந்த அனுதாபத்துடன் அறியத் தருகின்றோம்.

53/1, Temple Road, Jaffna. தகவல்: சஜீத் மரியாம்பிள்ளை
(R - 686)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள " ஈழநாதம் " பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 02 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.